<u>நகர் ஊரமைப்புத்துறை</u>
<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்</u>
<u>திருச்சிராப்பள்ளி மாவட்டம்</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ச.கண்ணனூர் பேரூராட்சி, ச.கண்ணனூர் மேற்கு கிராமம், சர்வே எண்கள்: 84/7A1, 7A2, 7A3, 7A4 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.
<u>(திட்டமில்லாப் பகுதி)</u>

அளவுத்திட்டம் : **1 : 400.**

இணையதள விண்ணப்ப எண் : SWP/RH9JB8GO/ 35330/2024.

வ

<u>குறிப்புகள்:</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - 0.85 ஏக்கர் (3450.00 ச.மீ) | |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | | |
| நிலையிலுள்ள சாலை | | |
| சாலை (ம) மூலை முடக்கு பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பளவு | - 2146.0 ச.மீ. | |
| கோரிய மனைகள் | - 17. | |
| ஒதுக்கிய மனைகள் | - 17. | |

<u>பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது.)</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு உத்தேச சாலை மற்றும் மூலை முடக்குகள் பரப்பு | - 1304.00 ச.மீ | |
| மின்வாரிய உபயோகம் | - 27.30 ச.மீ (1.27%) | |
| உள்ளாட்சி அமைப்பு | - 13.24 ச.மீ (0.61%) | |

<u>குறிப்பு:</u>

பூங்கா பரப்பிற்கான 10% இடத்திற்கு பதிலாக அரசு வழிகாட்டி மதிப்பின்படி அதற்கான தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

<u>கட்டிட வரம்பு :</u>

சாலையின் அகலம் 9.0மீ. வரை 1.50மீ, சாலையின் அகலம் 9.0மீ. முதல் 12.0மீ. வரை 3.0மீ. சாலையின் அகலம் 12.0மீ. முதல் 24.0மீ. வரை 6.00மீ. என்ற அளவில் விடப்பட வேண்டும்.

<u>மூலை முடக்கு :</u>

சாலையின் அகலம் 12.00மீ. வரை 1.50மீ x 1.50மீ (ம) 12.மீ க்கு மேல் 4.50மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 71 ஊ.வ. (ம) உ. துறை நாள்: 16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்று மற்றும் அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பணை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.


7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) புல வரைபடத்தின் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள கிணறு மூடப்பட்டதை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

9) செயல் அலுவலர், ச.கண்ணனூர் சிறப்பு நிலை பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்:755/2024, நாள்:30-09-2024-ன் படி சாலைக்கான சான்று பெறப்பட்டதின் அடிப்படையில் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது. இதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>குறிப்பு:</u>
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ / ந.ஊ.இ.இ.(திமா) எண்:202 / 2024.
(இணையதள ஒப்புதல்)




...ார்த்திக்
...ளர் நிலை-III

ரெ.விஸ்வநாதன்
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

Signature Not Verified